வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.கஎண் 4379/ஆ4/2025 நாள் 02.04.2026

பொருள் தேர்வுப் பணி– வேலூர் மாவட்டம் மார்ச்– 2026 நடைபெற்று முடிந்த மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வு விடைத் தாள் திருத்தும் முகாம் –**வேலூர் –72 ஈ.வெ.ரா.அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் குடியாத்தம்,செயிண்ட் ஜான்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில்** 07.04.2026 முதல் நடைபெறும் விடைத்தாள் திருத்தும் பணி – முதுகலை ஆசிரியர்களை –உரிய தேதியில் விடுவித்து அனுப்ப தெரிவித்தல் –தொடர்பாக

பார்வை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 014376/ H2 / 2025 நாள் 26.03.2026

பார்வையில் காணும் அரசு தேர்வுகள் இயக்கக கடிதத்தின் படி, வேலூர் மாவட்டம் , **வேலூர் முகாம் எண் –72, ஈ.வெ.ரா.அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் குடியாத்தம், முகாம் எண்.73, செயிண்ட் ஜான்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில்** 07.04.2026 முதல் நடைபெறவுள்ள மேல்நிலை இரண்டாமாண்டு மற்றும் முதலாமாண்டு(Arrear) பொதுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி மேற்கொள்ளவுள்ளதால் அனைத்து பாட முதுகலை ஆசிரியர்களையும் உரிய தேதியில் விடுவித்து அனுப்ப தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விடைத்தாள் திருத்தும் பணிக்கு விலக்கு அளிக்க கோரும் எவ்வித கோரிக்கையினையும் ஏற்க இயலாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

கண்பார்வையற்றோர் தவிர ஏனைய அனைத்து முதுகலை ஆசிரியர்கள் அனைவரையும் விடைத்தாள் திருத்தும் முகாமில் 07.04.2026 அன்று காலை 8.30 மணிக்கு கலந்து கொள்ள ஏதுவாக பணியில் இருந்து விடுவித்து விடுவித்த ஆணையின் ஒரு நகலினை 06.04.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் தவறாது ஒப்படைக்க வேண்டுமென அனைத்து அரசு/ ஆதி திராவிட /அரசு உதவிபெறும்/ நகரவை மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு மீள தெரிவிக்கப்படுகிறது.

//ஓம்.//

முதன்மைக்கல்வி அலுவலர்

வேலூர்

**பெறுநர்**

தலைமைஆசிரியர்கள் / முதல்வர்கள்

அரசு/ அரசு உதவிபெறும்/ நகரவை / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள்.வேலூர் மாவட்டம்.

**நகல் –**

**1.** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.

2.முகாம் அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை) தகவலுக்காக அனுப்பலாகிறது.